அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 459, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார் மற்றும் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

459—

வனத் தீயைத் தடுத்தல்

***8978—திரு. ரா. சரத்குமார்:**
திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வனத் தீயினைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், வனத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) தமிழக வனப் பகுதிகளில் தீப்பிடிப்பதைத் தடுக்க அரசு கீழ்க்கண்ட நடவடிக்கைகளை எடுத்துவருகின்றது:

தீத்தடுப்புக் கோடுகள் வெட்டுதல், தீ எச்சரிக்கை மையங்கள் மற்றும் தீத்தடுப்புக் கோபுரங்கள் அமைத்தல், கிராம வனக் குழுக்களுக்குத் தீத்தடுப்புப் பயிற்சி அளித்தல், தீத்தடுப்புக் காவலர்களால் ரோந்துப் பணி மேற்கொள்ளுதல், நீர்த்தேக்க அமைப்புகளை உருவாக்குதல், தீத்தடுப்பு விழிப்புணர்வு முகாம்கள் நடத்துதல், தீத்தடுப்பு உபகரணங்கள் வழங்குதல், தொலைநோக்குக் கருவிகள்மூலம் தீத்தடுப்புக் கோபுரங்களிலிருந்து தீ நிகழ்வுகளைக் கண்காணித்தல் மற்றும் விரைவு தீத்தடுப்பு ரோந்துக் குழுமூலம் தீத்தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளுதல் ஆகியவற்றின்மூலம் தமிழக வனப் பகுதிகளில் தீப்பிடிப்பது தடுக்கப்படுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேஜி. பிரின்ஸ் அவர்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்குத் தொடர்ச்சி மலை, தமிழக மக்களின் வாழ்வாதாரமாக விளங்குகிறது. இங்கு பல்வேறு வகையான உயிரினங்கள், விலை உயர்ந்த மரங்கள், அரிய வகை மூலிகைகள், வன விலங்குகள், வன விலங்குச் சரணாலயங்கள், அடர்த்தியான வனக் காடுகள் எல்லாம் உள்ளன. இப்படிப்பட்ட வனத்தின் வளத்தை இந்த அரசு பாதுகாக்க வேண்டும். மேலும், தீப்பிடித்து எரிந்த பின்பு அந்த இடத்தில் புல், பூண்டு எல்லாம் அழிந்து மண் வளம் குறைந்து மண் அரிப்பு ஏற்படுகிறது.*

முற்பகல் 10–30

மனிதரால் தீ வைக்கப்படுகிறதா, இல்லையென்றால் இயற்கையாக தீப் பற்றுகிறதா? இரப்பர் பிளாண்ட்டேஷனில்கூட தீ ஏற்பட்டிருக்கிறது. அதற்குக்கூட சரியான பதிலை அறிந்துகொள்ள முடியவில்லை. வனத் துறையினுடைய மரக் கிடங்குகள்கூட, பலமுறை தீயால் எரிக்கப்பட்டிருக்கின்றன. இப்படிப்பட்ட சம்பவங்களைக் கண்டறிந்து, அடர்த்தியான வனப் பகுதிகளிலே உயரமான இடங்களில் Fire Watch Tower *அமைத்து, வெளிநாடுகளில் பயன்படுத்துவதுபோல நவீன கேமராமூலம் தீப் பிடிக்கும் இடங்களைக் கண்டறிந்து, மேலும் தீ பரவாமல் தடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பசுமையாக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2–5–2013 அன்று பேரவை விதி 110–ன்கீழ் நடப்பாண்டில் ரூபாய் 35 கோடியே 62 இலட்சம் மதிப்பீட்டில் வனப் பராமரிப்புப் பணிகளான உயிர்ப்பன்மை பாதுகாப்பு மற்றும் தீத் தடுப்பு மேலாண்மை போன்ற பணிகளை மேற்கொள்ள நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்கள். தமிழக வனப்*

2013 மே 10]

பகுதிகளில் ஏற்படும் தீ விபத்துகளால் பெரும்பாலும் குறைந்தளவிலான சேதம் மட்டுமே ஏற்படுகிறது. நெருப்பினால் சேதம் ஏற்பட்டுள்ள வனப் பகுதிகளில் மழைக் காலங்களில் துளிர்விட்டு வளர ஆரம்பித்து விடுகிறது. நெருப்பு பெரும்பாலும் தரையில் உள்ள காய்ந்த இலைகள், சருகுகளில் மட்டுமே பிடிப்பதால், புல் பூண்டுகள், புதர் செடிகள் மட்டுமே தீயினால் பாதிக்கப்படுகின்றன. நிலையான மரங்களுக்கு ஏதும் பாதிப்பு ஏற்படாத வண்ணம் பல்வேறு தீத் தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. தீயினால் இதுவரை வன விலங்குகள் ஏதும் பாதிக்கப்படவில்லை. மேலும், இயற்கையாக வளர்ந்த மரங்களுக்கும் பாதிப்பு ஏற்படுவதில்லை. இருப்பினும், தீப் பிடிப்பதைத் தடுக்க அரசு எல்லா வகையிலும் நடவடிக்கை எடுத்து வருகின்றது. மேலும், தீத் தடுப்புக் கோபுரங்களிலிருந்து தீ நிகழ்வு ஏற்படாவண்ணம் கண்காணிக்கப்பட்டு, தீ விபத்துகளை ஏற்படுத்தும் சமூக விரோதிகள் கண்டறியப்பட்டு, கைது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீபத்தில் தென்னாப்பிரிக்க நாட்டில்கூட, வனங்களில் தீப் பிடித்து பல மாதங்களாக அணைக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. ஆகவே, தமிழகத்தினுடைய வனப் பகுதிகளிலே, அவ்விதமான ஒரு நிகழ்வு ஏற்படாதவண்ணம், அப்படி ஒரு நிகழ்வு வருகிறது என்றால், அதைத் தடுப்பதற்கு தீயை அணைக்கக்கூடிய திட sodium bicarbonate மூலமாக ஹெலிகாப்டர்மூலம் தீப் பிடிக்கக்கூடிய இடங்களில் தீயை அணைக்கவும், மேலும் Fire Protection Watchman பணியிடங்களை அதிகரித்து, வனப் பகுதிகளைக் காப்பாற்றவும் அரசு முன்வருமா என்பதையும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்குரிய நடவடிக்கை எடுப்பார்களா என்பதையும் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனங்களில் தீத் தடுப்பு நடவடிக்கைகள் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் சிறப்பாக எடுக்கப்பட்டு வருகின்றன. தீ நிகழ்வுகள் ஏற்படாவண்ணம் பாதுகாக்க கோடைக்காலம் துவங்கும் முன்னரே காப்புக் காடுகளுடைய எல்லைகளில் தீத் தடுப்புக் கோடுகள் 3 மீட்டர் அகலத்திற்கு வெட்டப்படுகின்றன. அங்கே தீ ஏற்படும் மாதங்களான ஜனவரி, பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் புதிதாக தீத் தடுப்புக் காவலர்கள் நியமனம் செய்யப்பட்டு, அவர்கள் ரோந்துப் பணிகளை மேற்கொண்டு, தீ நிகழ்வுகளைத் தடுக்க உபயோகப்படுத்தப்பட்டு வருகிறார்கள் மற்றும் பல்வேறு நீர்த்தேக்க அமைப்புகள் உருவாக்கப்படுகின்றன. ஆழ்குழாய்க் கிணறு, கைப் பம்புகள் அமைத்தல், சிமென்ட் தடுப்பணைகள், கசிவுநீர்க் குட்டைகள் கட்டுதல் இப்படிப் பல்வேறு வகைகளில் தீத் தடுப்பு நிகழ்வுகள் நடைபெற்றுகொண்டிருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியதை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு சென்று, ஆய்வு செய்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 460, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். வேதாச்சலம், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

460—

சுரங்கப் பாதை

***6729—திரு. எஸ். வேதாச்சலம்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பத்தூர் தொகுதி, கொரட்டூர் இரயில்வே கேட் பகுதியில் சுரங்கப் பாதை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?